உ

சிவமயம்

........................................ வித்தியாசாலை.

........................................ கல்லூரி.

# சிவாகம சைவ சித்தாந்த
# சாத்திரப் படிப்பு

# சிவஞான சித்தியார்

## சுபக்கம் — மூலம்

முதலாம் சூத்திரம்



இது

அராலி தெற்கு

**ஸ்ரீ வே. கந்தையா அவர்களால்**

யாழ்ப்பாணம்

சைவப்பிரகாச யந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்றது.

விஜயஹு ஆவணிமீ ௪௨

1953.

விலை சதம் 10.

உ

சிவமயம்

# நாம் வேண்டுவது

சைவப் பெற்றோரே!     சைவ ஆசிரியர்களே!!

ஏனைய சைவ அபிமானிகளே!!!

**சைவ** ஞான நூல்களைக் கற்றலும் கற்பித்தலும் ஞானபூசையாகுமென்று சிவஞானசித்தியார் சொல்லுகிறது.

சிவஞான நூல்களைக் கல்லாமையினாலேதான் சிவபெருமானை அடையும் வழியை அறியாதவர்களாய்ச் சைவ மக்கள்தானும் தாம் கடைத்தேறி உய்யும் வழியைக் கைவிடுகின்றனர். ஆதலினால் உங்களுங்கள் பிள்ளைகளையும் உறவினர்களையும், சிவஞான நூல்ப் பாக்களிற் சிலவற்றையேனும் பாடமாக்கச் செய்வீர்களாயின் உங்களுக்குச் சிறந்த சிவபுண்ணியப் பலன் உண்டாகும். தானங்களிற் சிறந்தது வித்தியாதானமே. அதிலும் மோட்சத்தைக் கொடுக்கும் சிவஞான தானமே அதிசிறந்தது என்று சூதசங்கிதை சொல்லும். ஆதலினாற் சிவஞான நூல்களைக் கற்றும், கற்பித்தும் அச்சிட்டுப் பிறர்கற்கக் கொடுத்தும் உதவுங்கள்.

இங்கே சிவஞானசித்தியாரின் முதற் சூத்திரத்தை இந்நோக்கமாகப் பிரசுரித்திருக்கிறோம்.

திருஅருள் துணை.

**வே. கந்தையா,**
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

கலியுகம் – ௫௦௫௫
விஜயஹூ ஆவணிமீ ௪உ
**( 20-8-1953 )**

சிவமயம்

...................................... வித்தியாசாலை.

............................................................ கல்லூரி.

# சிவாகம சைவசித்தாந்த சாத்திரப் படிப்பு.

## சிவஞானசித்தியார்

### சுபக்கம்—மூலம்

#### விநாயகர் வணக்கம்

ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய்ஐங் கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறைஇதழித் தாழ்சடையான்
தருமொருவா ரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும்வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகோட்டும் அயன்திருமால் செல்வமுமொன்
றோவென்னச் செய்யும் தேவே.

#### பிரமாணவியல்

முதலாம் சூத்திரம்

ஒருவனோ டொருத்தி ஒன்றென் றுரைத்திடும் உலகமெல்
வருமுறை வந்து நின்று போவதும் ஆதலாலே [லாம்
தருபவன் ஒருவன் வேண்டும் தான்முதல் ஈறு மாகி
மருவிடும் அநாதி முத்த சித்துரு மன்னி நின்றே. (1)

உதிப்பதும் ஈறுமுண்டென் றுரைப்பதிங் கென்னை முன்னோர், மதித்துல கநாதியாக மன்னிய தென்ப ரென்னின், இதற்கியான் அனுமா னாதி யெடேனிப்பூ தாதி யெல்லாம், விதிப்படி தோற்றி மாயக் காணலான் மேதினிக்கே. (2)

இயல்புகாண் தோற்றி மாய்கை என்றிடின் இயல்பி னுக்குச், செயலதின் றியல்பு செய்தி செய்தி யேல் இயல்ப தின்றும், இயல்பதாம் பூதந் தானே இயற் றிடுஞ் செய்தி யென்னில், செயல் செய்வான் ஒருவன் வேண்டுஞ் செயற்படும் அசேத னத்தால். (3)

நிலம்புனல் அனல்கால் காண நிறுத்திடும் அழிக் கும் ஆக்கும், பலந்தரு மொருவ னிங்குப் பண்ணிட வேண்டா வென்னின், இலங்கிய தோற்ற நிற்றல் ஈறிவை இசைத லாலே, நலங்கிளர் தோற்ற நாசம் தனக்கிலா நாதன் வேண்டும். (4)

சார்பினில் தோன்று மெல்லாம் தருபவன் இல்லை யென்னில், தேரின்இல் லதற்கோ தோற்றம் உள்ளதற் கோநீ செப்பாய். ஓரின்இல் லதுவுந் தோன்று துள்ள தேல் உதிக்க வேண்டா, சேர்விலா திரண்டு மின்றி நிற்பது தோன்று மன்றே. (5)

உள்ளது மிலது மின்றி நின்றதொன் றுளதே லுண்டாம், இல்லதே யில்லை யாகும் தோற்றமும் இசையா தாகும், உள்ளகா ரணத்தி லுண்டாம் காரிய முதிக்கும் மண்ணில், இல்லதாம் படங்க டாதி எழில் தரு மியற்று வானல். (6)

ஒருபொரு ளொருவ னின்றி உளதில தாகு மென் னில், தருபொரு ளுண்டே லின்றும் தன்மையின் றின்றே லுண்டாய், வருதலின் றிலது கார்ய முதலுள தாகு மென்னில், கருதுகா ரியமு முண்டாய்த் தோற்றமுங் கருத்தா வாலாம். (7)

காயத்தின் அழிவு தோற்றம் கண்டனம் உலகிற் கா ணே, நீஇத்தை உரைத்த வாறிங் கென்னெனில் நிகழ்த்து முண்மை, மாயத்த உலகம் பூநீர் தீவளி வான மாதி, யாயித்தா னென்றி னென்று தோன்றிநின் றழிதலாலே. (8)

ஓரிடம் அழியப் பின்னும் ஓரிடம் நிற்கும் ஒக்கப்
பாரிடம் அழிவ தின்றாம் என்றிடிற் பயில்வித் தெல்லாம்
காரிட மதனிற் காட்டும் அங்குரங் கழியும் வேனில்
சீருடைத் துலகு காலஞ் சேர்ந்திடப் பெயர்ந்து செல்லும்.

காலமே கடவு ளாகக் கண்டனம் தொழிலுக் கென்னில்
காலமோ அறிவின் றாகும் ஆயினுங் காரி யங்கள்
காலமே தரவே காண்டும் காரணன் விதியி னுக்குக்
காலமுங் கடவு ளேவ லால்துணைக் கார ணங்காண். (10)

அழிந்தபின் அணுக்கள் தாமே அகிலமாய் வந்து நின்று, கழிந்திடுங் கன்மத் தென்னில் கன்மமும் அணு வுங் கூட, மொழிந்திடுஞ் சடமே யாகி மொழிதலான் முடியா செய்தி, ஒழிந்திடும் அணுரூ பங்கள் உலகெலா மொடுங்கு மன்றே. (11)

கார ணஅ ணுக்கள் கெட்டாற் காரிய உலகின் றென்னில்
காரண மாயை யாகக் காரியங் காண லாகும்
காரண மாயை யென்னை காண்பதிங் கணுவே யென்னில்
காரண மாயை யேகாண் காரியம் அணுவிற் கண்டால்.

காரிய மென்ப தென்னை காரண அணுவை யென்னில்
காரியம் அவய வத்தாற் கண்டனங் கடாதி போலக்
காரிய உருவ மெல்லாம் அழிதருங் கார ணத்தால்
காரிய உருப்பின் மாயை தருமெனக் கருதி டாயே. (13)

தோற்றமும் நிலையு மீறும் மாயையின் தொழில தென்றே
சாற்றிடு மூலகம் வித்துச் சாகாதி அணுக்க ளாக
ஏற்றதே வீண்டு நிற்கும் இல்லதே விளைவ தின்றும்
மாற்றநீ மறந்தா யித்தால் மாயையை மதித்தி டாயே. ()

மாயையி னுள்ள வஞ்சம் வருவது போவ தாகும்
நீயதிங் கில்லை யென்னில் நிகழ்த்திடு முயலிற் கோடு
போய்உகும் இலைகளெல்லாம் மரங்களிற் புக்குப்போதின்
ஆயிடும் அதுவு மென்னிற் காரணங் கிடக்க வாமே. (15)

கருதுகா ரணமுண் டாகக் காரிய முன்ன தாகி, வருதலால் அநாதி வைய மற்றொரு கடவு ளித்தைத், தருதலால் ஆதி யாகச் சாற்றலு மாகு மாயைக், கொரு வனு ரென்னிந் கென்னின் உள்ளவா றுரைப்பக்கேள்நீ.

புத்திமற் காரி யத்தால் பூதாதி புருடன் தானும், அத்தனு கரணம் பெற்றால் அறிதலால் அவற்றை மாயை, உய்த்திடும் அதனுல் மாயைக் குணர்வொன்று மில்லை யென்றே, வைத்திடு மதனுல் எல்லாம் வருவிப்பா னொருவன் வேண்டும். (17)

காரிய கார ணங்கள் முதல்துணை நிமித்தம் கண்டாம்
பாரின்மண் திரிகைபண்ணு மவன்முதல் துணைநி மித்தம்
தேரின்மண் மா யை யாகத் திரிகைதன் சத்தி யாக
ஆரியன் குலால னுய்நின் ருக்குவன் அகில மெல்லாம். ()

விந்துவின் மா யை யாகி மாயையின் அவ்வி யத்தம்
வந்திடும் விந்துத் தன்பால் வைகரி யாதி மாயை
முந்திடும் அராக மாதி முக்குண மாதி ஏழும்
தந்திடுஞ் சிவ வன்தன் சந்நிதி தன்னில் நின்றே. (19)

வைகரி செவியில் கேட்ப தாய்அத்த வசன மாகி
மெய்தரும் உதான வாயு மேவிட விளைந்த வன்னம்
பொய்யற அடைவு டைத்தாய்ப் புந்திகா ரணம தாகி
ஐயமில் பிராணவாயு அடைந்தெழுந்தடைவுடைத்தாம்.

உள்ளுணர் ஓசையாகிச் செவியினில் உறுதல்செய்யா(து)
ஒள்ளிய பிராண வாயு விருத்தியை உடைய தன்றித்
தெள்ளிய அக்க ரங்கள் சிந்திடுஞ் செயல தின்றி
மெள்ளவே எழுவ தாகும் மத்திமை வேற தாயே. 21)

வேற்றுமைப் பட்ட வன்னம் வெவ்வேறு விபாக மாகித், தோற்றுதல் அடைவொ டுக்கிச் சொயம்பிர காச மாகிச், சாற்றிடு மயிலி னண்டம் தரித்திடும் சலமே

போன் றங்(கு), ஆற்றலே உடைய தாகிப் பைசந்தி அமர்ந்து நிற்கும். (22)

சூக்குும வாக்க துள்ளோர் சோதியாய் அழிவ தின்றி, ஆக்கிடும் அதிகா ரத்திற் கழிவினை தன்னைக் கண்டால், நீக்கமில் அறிவா னந்தம் முதன்மைநித் தியமு டைத்தாய்ப், போக்கொடு வரவி லேப்பும் விகார மும் புருட னின்றும். (23)

நிகழ்ந்திடும் வாக்கு நான்கு நிவிர்த்தாதி கலையைப் பற்றித், திகழ்ந்திடும் அஞ்ச தாகச் செயல்பரி ணமை மாறு, புகழ்ந்திடும் விருத்தி யாகும் படங்குடி லாறைப் போல, மகிழ்ந்திடும் பிரம மன்று மாமாயை என்பர் நல்லோர். (24)

வித்தைகள் வித்தை ஈசர் சதாசிவர் என்றி வர்க்கு
வைத்துறும் பதங்கள் வன்னம் புவனங்கள் யந்தி ரங்கள்
தத்துவம் சரீரம் போகம் கரணங்கள் தாமெ லாமும்
உய்த்திடும் வைந்த வந்தான் உபா தான மாகி நின்றே. ()

மூவகை அணுக்க ளுக்கு முறைமையால் விந்து ஞானம்
மேவின தில்லை யாகில் விளங்கிய ஞான மின்றும்
ஓவிட விந்து ஞானம் உதிப்பதோர் ஞான முண்டேல்
சேவுயர் கொடியி னான்றன் சேவடி சேர லாமே. (26)

அருவினில் உருவந் தோன்றி அங்காங்கி பாவ மாகி
உருவினில் உருவ மாயே உதித்திடும் உலக மெல்லாம்
பெருகிடும் சுருங்கும் பேதா பேதமோ டபேத மாகும்
ஒருவனே யெல்லா மாகி அல்லவா யுடனு மாவன். (27)

அருஉரு ஈறு தாகும் விகாரமும் அவிகா ரத்தின், வருவது மில்லை என்னின் வான்வளி யாதி பூதம். தரு வது தன்னின் மேக சலனசத் தங்க ளோடும், உருவமின் உருமே றெல்லாம் உதித்திடும் உணர்ந்து கொள்ளே.(28)

மண்ணினிற் கடாதி யெல்லாம் வருவது குலாலனாலே; எண்ணிய உருவ மெல்லாம் இயற்றுவன் ஈசன்றானும், கண்ணுகா ரியங்க ளெல்லாம் காரணமதனிற் காண்பான், பண்ணுவ தெங்கே நின்றிங் கென்றிடிற் பகரக் கேள்நீ. (29)

சீலமோ உலகம்போலத் தெரிப்பரி ததனால் நிற்கும், கோலமும் அறிவாரில்லை ஆயினுங் கூறக்கேள்நீ, ஞாலமேழினையுந்தந்து நிறுத்திப்பின் நாசம் பண்ணும், காலமே போலக் கொள் நீ நிலைசெயல் கடவுட் கண்ணே.

கற்றநூற் பொருளும் சொல்லும் கருத்தினில் அடங்கித் தோன்றும், பெற்றியும் சாக்கிராதி உயிரினிற் பிறந்தொடுக்கம், உற்றதும் போல வெல்லா உலகமும் உதித்தொடுங்கப், பற்றொடு பற்ற தின்றி நின்றனன் பரனு மன்றே. (31)

உயிரவை ஒடுங்கிப் பின்னும் உதிப்பதென் அன்பா லென்னில், செயிருறு மலத்தினாற் சிதைந்ததே தென்னிற் சித்தத்(து), அயர்வொழிக் காரியங்கள் அழியங்கா ரணங் கிடக்கும், பயில்தரு காரியம்பின் பண்டுபோற் பண்ணு மீசன். (32)

தோற்றுவித் தளித்துப் பின்னும் துடைத்தருள் தொழில்கள் மூன்றும்; போற்றவே உடைய னீசன் புகுந்தது விகாரமென்னில், சாற்றிய கதிரோன் நிற்கத் தாமரை அலருங் காந்தம், காற்றிடும் கனலை நீரும் கரந்திடும் காசினிக்கே. (33)

உரைத்தஇத் தொழில்கள் மூன்றும் மூவருக் குலகம் ஓத, வரைத்தொரு வனுக்கே யாக்கி வைத்ததிங் கென்னை யென்னின், விரைக்கமலத்தோன் மாலும் ஏவலான் மேவினோர்கள், புரைத்ததி கார சத்தி புண்ணியம் நண்ண லாலே. (34)

இறுதியாம் காலந் தன்னில் ஒருவனே இருவ ருந்தம், உறுதியின் நின்ரு ரென்னின் இறுதிதா னுண்டா காதாம், அறுதியில் அரனே யெல்லாம் அழித் தலால் அவனு வின்னும், பெறுதுநாம் ஆக்கம் நோக் கம் பேரதி கரணத் தாலே. (35)

சொன்ன இத் தொழில்க ளென்ன காரணந் தோற்ற வென்னின், முன்னவன் விளையாட் டென்று மொழிதலு மாம்உ யிர்க்கு, மன்னிய புத்தி முத்தி வழங்கவும் அரு ளால் முன்னே, துன்னிய மலங்கள் எல்லாம் துடைப் பதுஞ் சொல்ல லாமே. (36)

அழிப்பிளைப் பாற்றல் ஆக்கம் அவ்வவர் கன்ம மெல்லாம், கழித்திடல் நுகரச்செய்தல் காப்பது கன்ம வொப்பில் தெழித்திடல் மலங்க ளெல்லாம் மறைப் பருள் செய்தி தானும், பழிப்பொழி பந்தம் வீடு பார்த் திடின் அருளே எல்லாம். (37)

அருவமோ உருவா ரூப மானதோ அன்றி நின்ற, உருவமோ உரைக்கும் கர்த்தா வடிவெனக் குணர்த் திங் சென்னின், அருவமும் உருவா ரூபம் ஆனது மன்றி நின்ற, உருவமும் மூன்றுஞ் சொன்ன ஒருவ னுக்குள்ள வாமே. (38)

நண்ணிடும் உருவ மென்னின் நமக்குள உருவம் போலப், பண்ணிட ஒருவன் வேண்டும் இச்சையேற் பலரும் இச்சை, கண்ணிய உருவங் கொள்ளேம் யாம் பெருங் கடவுள் தானும், எண்ணிய யோக சித்தர் போலுரு இசைப்பன் காணே. (39)

வித்தக யோகசித்தர் வேண்டுருக் கொள்ளு மாபோல்
உத்தமன் கொள்வனென்னின் அவர்களி லொருவ னவன்
அத்தகை யவர்க ளெல்லாம் ஆக்குவ தருளா லாங்கு
வைத்தது மாயை யென்னின் வடிவெலா மாயை யாமே.

மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிவ மாகும்
மாயஆ ணவமக ன்ற அறிவொடு தொழிலை ஆர்க்கும்
நாயகன் எல்லா ஞானத் தொழின்முதல் நண்ண லாலே
காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னால். (41)

சத்தியே வடிவென் றாலும் தான்பரி ணாம மாகும், நித்தமோ அழியும் அத்தால் நின்மலன் அருவே யென்னின், அத்துவா மார்க்கத் துள்ளான் அலனிவன் அருமை தன்னைப், புத்திதா னுடையை போல இருந் தனை புகலக் கேள்நீ. (42)

உலகினில் பதார்த்த மெல்லாம் உருவமோ டருவ மாகி
நிலவிடு மொன்றொன் றாகா நின்றஅந் நிலையேபோல
அலகிலா அறிவன் றானும் அருவமே யென்னி லாய்ந்து
குலவிய பதார்த்தத் தொன்றாய்க் கூடுவன் குறித்திடாயே.

பந்தமும் வீடு மாய பதபதார்த் தங்க ளல்லான்
அந்தமும் ஆதி யில்லான் அளப்பில னாத லாலே
எந்தைதான் இன்னனென்றும் இன்னதா மின்ன தாகி
வந்திடா னென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்ற மின்றே.

குறித்ததொன் றாக மாட்டாக் குறைவிலன் ஆத லானும், நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமை யானும், வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுதல் இலாமையானும், நிறுத்திடும் நினைத்த மேனி நின்மலன் அருளி னாலே. (45)

ஆரணம் ஆக மங்கள் அருளினால் உருவு கொண்டு
காரணன் அருளா னாகில் கதிப்பவ ரில்லை யாகும்
நாரணன் முதலா யுள்ள சுரர்நரர் நாகர்க் கெல்லாம்
சீரணி குருசந் தானச் செய்தியும் சென்றி டாவே. (46)

உருவருள் குணங்க ளோடும் உணர்வருள் உருவிற் றோன்றும், கருமமும் அருள ரன்றன் கரசர ணாதி சாங்

கம், தருமரு ளுபாங்க மெல்லாம் தானருள் தனக்கோன் றின்றி, அருளுரு உயிருக் கென்றே ஆக்கினன் அசிந்த னன்றே. (47)

உலகினை இறந்து நின்ற தரன்உரு வென்பதோரார்
உலகவ னுருவில் தோன்றி ஒடுங்கிடு மென்றும் ஓரார்
உலகினுக் குயிரு மாகி உலகுமாய் நின்ற தோரார்
உலகினி லொருவ னென்பர் உருவினை உணரா ரெல்லாம்.

தேவரி னொருவ னென்பர் திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்றதோரார் முதலுருப் பாதி மாதர்
ஆவது முணரார் ஆதி அரி அயற் கறிய வொண்ணு
மேவுரு நிலையு மோரார் அவனுரு வினைவு மோரார். (49)

போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார், யோகியா யோக முத்தி உதவுதல் அதுவும் ஓரார் வேகியா னுற்போற் செய்த வினையினை வீட்ட லோரார், ஊகியா மூட ரெல்லாம் உம்பரின் ஒருவ னென்பர். (50)

ஒன்றேடொன் றெவ்வா வேடம் ஒருவனே தரித்துக்கொண்டு, நின்றலால் உலக நீங்கி நின்றனன் என்று மோரார், அன்றிஅவ் வேட மெல்லாம் அருபுரி தொழி லென் றோரார், கொன்றது வினையைக் கொன்று நின்ற அக் குணமென் றோரார். (51)

நாயகன் கண்ந யப்பால் நாயகி புதைப்ப எங்கும்
பாயிரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு கெற்றித்
தூயநேத் திரத்தி னாலே சுடரொளி கொடுத்த பண்பில்
தேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனுருத் தேச தென்னுர்.

கண்ணுறுதல் யோகி ருப்பக் காமன்நின் றிடவேட் கைக்கு, விண்ணுறு தேவ ராதி மெலிந்தமை ஓரார் மால்தான், எண்ணிவேள் மதனை ஏவ எரிவிளித் திம

வான் பெற்ற, பெண்ணிணைப் புணர்ந்து யிருக்குப் பேரின்ப மளித்த தோரார். (53)

படைப்பாதித் தொழிலும் பத்தர்க் கருளும்பா வனையும் நாலும், இடப்பாக மாத ராளோ டியைந் துயிர்க் கின்ப மென்றும், அடைப்பாளும் அதுவும் முத்தி யளித்திடு மியோகும் பாசந், துடைப்பானுந் தொழிலும் மேனி தொடக்கானேற் சொல்லொ ணாதே.

உருமேனி தரித்துக் கொண்ட தென்றலும் உருவி றந்த, அருமேனி யதுவுங் கண்டோம் அருவுரு வான போது, திருமேனி உபயம் பெற்றோம் செப்பிய மூன் றும் நந்தங், கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே. (55)

அத்துவா மூர்த்தி யாக அறைகுவ தென்னை என் னின், நித்தனாய் நிறைந்த வற்றின் நீங்கிடா நிலைமை யானும், சித்துடன் ஆசித்திற் கெல்லாம் சேட்டித னாத லானும், வைத்ததாம் அத்து வாவும் வடிவென மறைக ளெல்லாம். 56)

மந்திர மத்துவாவின் மிகுத்தொரு வடிவ மாகத், தந்ததென அரனுக் கென்னில் சகத்தினுக் குபாதா னங்கள். விந்துமோ கினிமான மூன்று மிவற்றின்மே லாகி விந்துச், சிந்தையா ரதீத மான சிவசத்தி சேர் ந்து நிற்கும். 57)

சுத்தமாம் விந்துத் தன்னில் தோன்றிய ஆத லானும், சத்திதான் பிரேரித் தப்பின் தானதிட் டித் துக் கொண்டே, அத்திறற் புத்தி முத்தி அளித்தலால் அரனுக் கென்றே வைத்தவா மந்திரங்கள் வடி வென மறைக ளெல்லாம். (58)

மந்திர மதனிற் பஞ்ச மந்திரம் வடிவ மாகத்
தந்திரம் சொன்ன வாறிங் கென்னெனிற் சாற்றக் கேள்நீ

முந்திய தோற்றத் தாலும் மந்திர மூலத்தாலும்
அந்தமில் சத்தி யாதிக் கிசைத்தலு மாகு மன்றே. (59)

அயன் றன் ஐஆதி ஆக அரனுரு வென்ப தென்னை
பயந்திடுஞ் சத்தி யாதி பதிதலாற் படைப்பு மூலம்
முயன்றனர் இவரேயாயின் முன்னவ னென்னை முற்றும்
நயந்திடும் அவனிவர்க்கு நண்ணுவதொரோவொன்றுமே.

சத்திதான் பலவோ வென்னில் தானொன்றே அநேகமாக, வைத்திடுங் காரி யத்தான் மந்திரி யாதிக் கெல்லாம், உய்த்திடு மொருவன் சத்தி போலரன் உடைய தாகிப், புத்திமுத் திகளை யெல்லாம் புரிந்த வன் நினைந்த வாறும். (61)

சத்திதன் வடிவே தென்னில் தடையிலா ஞான மாகும், உய்த்திடு மிச்சை செய்தி இவைஞானத் துளவோ வென்னின், எத்திற ஞானமுள்ள தத்திற மிச்சை செய்தி, வைத்தலான் மறைப்பில் ஞானல் மருவிடுங் கிரியை எல்லாம். (62)

ஒன்றதாய் இச்சா ஞானக் கிரியையென் றொரு மூன்ருகி, நின்றிடுஞ் சத்தி இச்சை உயிர்க்கருள் நேச மாகும், நன்றெலாம் ஞான சத்தி யால்நயந் தறிவன் நாதன், அன்றருட் கிரியை தன்னல் ஆக்குவன் அகில மெல்லாம். (63)

சீவனும் இச்சா ஞானக் கிரியையாற் சிவனை யொப் பான், ஆவனென் றிடின் அநாதி மலம்இவற் றினைம றைக்கும். காவல னிவன்செய் கன்மத் தளவினிற் கொடுப்பக் காண்பன், பாவியாம் புத்தி முத்திப் பயன் கொளும் பண்பிற் ருகும். (64)

ஞானமே யானபோது சிவன்தொழில் ஞான மொக்கின்
ஈனமில் சதாசி வன்பே ரீசனுந் தொழில தேறின்

ஊனமேற் கிரியை வித்தை உருத்திரன் இலய போகம்
ஆனபே ரதிகாரத்தோ டதிகர ணத்த னுமே. (65)

வித்தையோ டீசர் சாதாக் கியஞ்சத்தி சிவங்கள் ஐந்துஞ்
சுத்ததத் துவஞ்சி வன்தன் சுதந்திர வடிவ மாகும்
நித்தமென் றுரைப்பர் கால நீங்கிய நிலைமை யாலே
வைத்திலர் முற்பிற்பாடு வருவித்தார் கருமத்தாலே. (66)

ஒருவனே இராவ ணாதி பாகவ முற்றாற்போலத், தருவனிவ் வுருவ மெல்லாம் தன்மையும் திரியா னாகும், வரும்வடி வெல்லாஞ் சத்தி சத்திதான் மரமுங் காழ்ப்பும், இருமையும் போலமன்னிச் சிவத்தினோ டியைந்து நிற்கும். (67)

பொன்மைநீ லாதி வன்னம் பொருந்திடப் பளிங்க வற்றின், தன்மையாய் நிற்குமாபோல் சத்தித்ன் பேத மெல்லாம், நின்மலன் தானாய்த் தோன்றி நிலைமை யொன் றாயே நிற்பன், முன்னருட் சத்தி தன்பால் முகிழ்க்குந்தான் முளையா னன்றே. (68)

சத்தியுஞ் சிவமு மாய தன்மைஇவ் வுலக மெல்லாம், ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உணர்குண குணியு மாகி, வைத்தனன் அவளால் வந்த ஆக்கமிவ் வொழுக்க மெல்லாம், இத்தையும் அறியார்பீட லிங்கத்தி னியல்பு மோரார். (69)

சிவன் அரு உருவும் அல்லன் சித்தினோ டசித்தும் அல்லன், பவமுதல் தொழில்க ளொன்றும் பண்ணிடு வானும் அல்லன், தவமுத லியோக போகம் தரிப்பவ னல்லன் தானே, இவைபெற இயைந்து மொன்றும் இயைந்திடா இயல்பினானே. (70)

# பிழை திருத்தம்

| பக்கம் | பாட்டு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 2 | 4 | 5 | நாதன | நாதன் |
| 6 | 29 | 4 | காண்பான் | காண்பன் |
| 6 | 32 | 1 | அன்பால் | அரன்பால் |
| 8 | 45 | 4 | நினைத்த | நினைந்த |
| 9 | 51 | 3 | அருபுரி | அருள்புரி |
| 10 | 53 | 4 | யிருர்க்குப் | யிர்க்குப் |
| 10 | 57 | 2 | தந்தனெ | தந்தனென் |

**சிவபுண்ணியர்களே !**

இதில் 1000 பிரதிகள் யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதிச் சிருப்பர் திரு. சு. கனகசபை அவர் களின் பணவுதவியால் அச்சிற் பதிப்பிக்கப் பெற்றன.

இச் சிவபுண்ணியத்திற்கு இனிமேற் பொரு ளுதவி செய்பவர்களுடைய பெயர்களும் பணத் தொகையும் வருங்காலப் பிரசுரங்களில் வெளி யிடப்பெறும்.

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் கல்லூரியிலும் கோயிலிலும் கிராமத்திலும் ஒவ்வோர் பஞ்சா யத்தை நியமித்து அவர்கள் மூலமாக இதிலுள்ள எல்லா விருத்தங்களையும், சிறு பிள்ளைகள் கருத்து முழுவதையும் அறியாவிட்டாலும் தேவார திருவாச கங்களை இலகுவாய்ப் பாடமாக்குவதுபோல, **பாடமாக்கிக்** கற்கச் செய்யுங்கள்.

தமிழ் ஐந்தாம் வகுப்புத் தொடக்கம் மேல் வகுப்புப் பிள்ளைகள் பாடமாக்கும்படி செய்யுங்கள். சாதாரண நாட்களிற் குறைந்தபட்சம் ஒருமுறை யாவது வாசித்தும், ஈவான நாட்களில் இரண்டு மூன்று முறைகளாவது வாசித்தும் வந்தால் இலகு விற் பாடமாகும். இது அனுபவத்திற் கண்டது.

20—8—53. **வே. க.**

உ

சிவமயம்

# அறிவித்தல்

இப்பொழுது அச்சிடப்பெற்றிருக்கும் முதலாம் சூத்திரப்பிரதிகள் தேவையானவர்கள் கீழே கையொப்ப மிட்டிருப்பவருக் கெழுதி அல்லது நேரே கண்டு தேவையான பிரதிகள் பெற்றுக் கொள்ளலாம்.

மிகுதி பதினொரு சூத்திரங்களும் தனித் தனியே ஒவ்வொரு சூத்திரமாய் அச்சிட்டு வெளிவரும். பெற்றுக்கொள்ளலாம்.

வறிய குடும்பப் பிள்ளைகளுக்கு இலவசமாய்க் கொடுக்கப்பெறும்.

**வே. கந்தையா,**
( Malaya Pensioner. )
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.
யாழ்ப்பாணம்,
(இலங்கை)

கலியுக ௵ ௫0௫௫,
விஜய ௵ ஆவணி ௴ ௪௨,
20-8-1953.

சிவமயம்

# சிவஞானசித்தியார் முதற் சூத்திரம்

## முதலாம் விருத்தத்தின் பொருள் (சுருக்கம்)

இனிமேல் எல்லாச்சூத்திரங்களுக்கும், ஆங்கிலத்திலும் தமிழிலும் விரிவாய்வரும்.

***அதைப்பற்றிப் புதினப்பத்திரிகைகளின் மூலமாய் அறிவித்தல் வெளிவரும்.***

**கருத்து:** ஆண், பெண், அலி என்ற அவயவப் பகுப்புடைய உலகமானது வரவேண்டிய நெறி (நியதி)ப்படி தோன்றி, நின்று, மறைவதினாலே, இதைத்தருபவர் ஒருவர்வேண்டும். அவர் என்று முள்ளவர்; இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கினவர்; அறிவே ரூபமாயுள்ளவர். உலகத்தைத் தோற்றுவித்து, நிற்கச்செய்து, அழிப்பவரும் அவரே. உலகத்தோடு ஒன்றாயும், உடனாயும், வேறாயும் நின்றே இதைச் செய்வர்.

கே: 1. உலகெலாம் என்று உரைக்கப்படுவது இங்கே எது?

மறு: ஆண், பெண், அலி யென்ற மூவகைச் சீவராசிகளின் கூட்டமே.

கே: 2. இதைத்தருபவர் ஒருவர் ஏன் வேண்டும்?

மறு: உலகம் வருமுறை வந்து (தோன்றி), நின்று, போவது (மறைவது) ஆதலால்.

கே: 3. அவர் எப்படிப் பட்டவர்?

மறு: என்று முள்ளவர்; இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கியவர்; ஞானமே ரூபமாயுள்ளவர். (அநாதி, முத்த, சித்துரு).

கே: 4. எப்படி நின்று இதைச் செய்வர்? (மருவிடும்).

மறு: ஆன்மாக்களோடு ஒன்றாயும், உடனாயும், வேறாயும் நின்று செய்வர்.

கே: 5. வருமுறை யென்றாலென்ன?

மறு: ஆன்மாக்கள் தத்தங் கன்மங்களை அனுபவிப்பதற்கேற்ற நெறிமுறை,
(சற்காரியமுறை).

கே: 6. (i) ஒன்றுயென்றால் எப்படி?

மறு: உடலும் உயிரும்போல்.

கே: (ii) வேறுயென்றால் எப்படி?

மறு: சூரியவொளியும் கண்ணொளியும்போல்.

கே: (iii) உடனுயென்றால் எப்படி?

மறு: ஆன்ம அறிவும் கண்ணொளியும் போல்.

*Q.* 1. What is called the world here?

*Ans:* It is the group of Souls, differentiated as males, females and neutars.

*Q.* 2. Why does the world stand in need of a creator?

*Ans:* Because (i) the world is manifold and classifiable; (ii) The world appears, stays and disappears.

*Q.* 3. What are His qualities?

Ans: Ever-free, ever-existing, intelligence.

*Q.* 4. How does He recreate the world?

*Ans:* By functioning (i) becoming one with; (ii) being along with and (iii) being separate from, the souls.

*Q.* 5. What is the principle of the world coming, staying and going?

*Ans:* It is the principle of the Law of Karma combined with that of consistency: (Satkariyavatham).

*Q.* 6. Give examples for:

(i) Becoming one with:
*Ans:* As body and Soul.

(ii) Being separate from:
*Ans:* As sun-rays and eye-light;

(iii) Being along with:
*Aus:* As soul-knowledge and eye-light.

வே. கந்தையா,
சிவாகம சைவசமய இலவச பிரசாரகர்,
16-12-1953

அராலிதெற்கு,
வட்டுக்கோட்டை.
இலங்கை

Sri Sanmuganatha Press, Jaffna

சிவிக்பித்ராட்டை
இலங்கை

# ஆறுமுகக் கடவுளைப் பற்றி அரிய விளக்கப் போதனை

சிவாகமசைவாபிமானிகளே!

அடியேனுக்கு உபதேசித்த அருட்பெரியாருடைய திருப்பாதங்களுக்கு வணக்கம்செய்து அவருபதேசித்த வண்ணம் ஆறுமுகப்பெருமானின் மூலமந்திரத்தின் தத்துவப்பொருளை இங்கு சொல்லுகிறேன். அகத்தே ஆறுமுகப் பெருமானின் திருக்காட்சியைப் பெறவிரும்பும் (யோக நிலைக்குப்) பக்குவமான அவருடைய அடியார்களுக்கு இது அதிகம் பயன்கொடுக்கும்.

"*சரவணபவாயநம*" என்பது அம்மூலமந்திரம். "*சர—அண—உற்பவனுக்கு—யான்—வணக்கம் செய்கின்றேன்*" *பிராண வாயுவாகிய சரத்தை அணையாகக்கொண்டு உற்பவித்தபவ :— "சரவணபவ"*. பிரணவத்திற்கும், பிராண வாயுவின் இயக்கமாகிய சுவாசத்திற்கும், அவ்வியக்கத்தினால் நினைவு அலையையும் (thought wave) நினைவு உருவையும் (thought form) தோன்றச் செய்யும் மனதிற்கும், மூளைக்கும், இடை, பிங்கலை, சுழுமுனை நாடிகளுக்கும், குண்டலிசக்திக்கும், ஆறு ஆதாரங்களுக்கும், அவ்வாதாரங்களை நிலைக்களமாயுள்ள ஆறு சக்திகளையுடைய மூர்த்திகளுக்கும், "*........ஆறுமாமுகத்து அமர்ந்ததும் இதுவே. வேறில்லை*"........." என்று திருச்செந்தூரகவலிற் சொல்லப்பெற்ற "*சுப்பிரமணியக் கடவுளுக்கும்*" தொடர்புகள் உண்டு. மற்றச் சூத்திரப் பிரசுரங்களில் விளக்கம் விரிவாய்வரும்.

மேலும் மன இயக்கமாகிய (mental activity) நினைவினதும், நினைவு அலையினதும், நினைவு உருவினதும் தீவிர தரதொற்றும் தன்மையையும், தீவிர தரவியாபிக்கும் தன்மையையும் (highly infectious and radio-active) விரிவாய் விளக்கம் செய்யப்பெறும். It is an elucidation based on religion and science about mental epidemic. பாசச் சிறைக்குள் இருக்கும் எல்லோரும் தற்காலம் இத்தொற்று தலைப்பற்றி அவசியம் அறியவேண்டும். அறிந்தாற்தான் உய்வை விரும்பும் ஆன்மாக்கள் உண்மையான விடுதலையையும், அகத்தே சுயராச்சியத்தையும், அகத்தே ஆறுமுகக்கடவுளின் காட்சியையும் பெறத்தக்க சாதனங்களில் ஈடுபட்டுத் தூய தவவாழ்க்கை நடத்துவார்கள்.

ஆறுமுகக்கடவுளின் திருப்பாதங்களுக்கு அபயம்.


அராலி தெற்கு. வே. கந்தையா
வட்டுக்கோட்டை, இலங்கை. சிவாகம சைவ இலவசபிரசாரகர்


1-2-1954

# போதிக்கும் முறை.

**சிவத்திருப்பணி யன்பர்களே !**

இச் சிவஞான நூலிலுள்ள 70 திருவிருத்தங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள நாலு வரிகளில் ஒவ்வொன்றையும் இரண்டு பகுதிகளாகப் பிரித்து, **முன் முதல் அரைவாசியை நாலுதரமும், பின் மற்ற அரைவாசியை நாலுதரமும்** கோயில்களிற சிவநாமங்கள் தேவாரங்கள் மற்றவர்கள்பின் சொல்லுவதற்கு ஒருவர் முன் சொல்லிக் கொடுக்குமாபோற் கோவில்களிலும் பள்ளிக்கூடங்களிலும் இளைஞர்களுக்கும் முதியோர்களுக்கும் ஒவ்வொருநாளும் தயவுசெய்து சொல்லிக்கொடுங்கள். வீட்டிலுள்ள பிள்ளைகளுக்கும் வசதியான நேரமுள்ள முதியோருக்கும் அவ் வீட்டிலுள்ள வாசிக்கத் தெரிந்த ஒருவர் மேலே சொல்லிய முறைப்படி ஒவ்வொரு நாளும் தயவுசெய்து சொல்லிக்கொடுக்கச்செய்யுங்கள். இம்முறையை அனுசரிப்பதனால் எல்லாத் திருவிருத்தங்களையும் சீக்கிரம் பாடமாக்கிப்போடலாம். இவைகளுக்கு விரிவுரைகள் இனிமேல் வெளிவரும். **இத்திருப்பணி இறைவன் திருவடி அடைவிக்கும் உயர்ந்த ஞானபூசை**யாகுமென்று சிவஞானசித்தியார் சுபக்கம் 8-ம் சூத்திரம் 23-ம் திருவிருத்தம் செப்புகின்றது. ஆகையாற் தயவுசெய்து மேற்சொன்னவாறு **உயர்ந்த ஞானபூசை செய்து** மோட்சப் பேற்றிற்கு ஆளாகுங்கள்.

இச் சிவபுண்ணியம் மேலும் பரவிவர இந்த ஞான நூலைத் தாமாகவேனும், பிறர் உதவி பெற்றேனும் அச்சிடுவித்தும், அல்லது அச்சிடுவிப்போரிடம் விலைக்கு வாங்கியாவது பிறருக்கு உபகரித்து உதவிபுரியுங்கள்.

அராலி தெற்கு,
விஜய ௵ ஆவணி ௴ 4-ந் ௳. **வே. கந்தையா.**

சிவமயம்

# ஆறுமுகநாவலரின் திருத்தொண்டு சேவா நிலையமும்

## அவரின்ஞாபக சிவஞானபூசை வித்தியாசாலையும் ஸ்தாபனம்.

**சிவாகம சைவாபிமானிகளே ! விழிமின் ! எழுமின் !!**

*சிவஞான பூசைத்தொண்டிற்கு வருமின் !*

*வடமொழிச் சிவாகமங்கள் இருபத்தெட்டையும் சிவ பெருமான் அருளிச் செய்த உண்மைச் சிவாகமங்களென்று உணர்ந்து அவை போதிக்கும் சைவ சித்தாந்த சமயத்தை எங்களுக்காக மிகு ஆவலுடனும் ஆர்வத்துடனும் வெகு தியாகத்துடனும் போதித்துப் பரிபாலித்த ஆறுமுகநாவலர் பெருமானுடைய ஞாபகத்தை என்றும் இப்பூமியில் நிலை நாட்டுவதற்கும், சிவாகமசைவ சமயிகளாகிய நா மெல்லோரும் உய்வதற்கும் அவர் செய்து வந்த அரிய சிவபுண் ணியத்தொண்டை இப்பூமியிலே இலங்கை, இந்தியா, மலாயா முதலிய பல தேவையான எவ்வெவ்விடங்களிலும் தொடர்ந்து பரிபாலனம் செய்வதற்கும், நிகழும் கலியுகம் 5055 விஜய ஸ்ரீ தை மீ 3ம் உ (16-1-1954) சனிக்கிழமை அவர் பெயராலும் இவ்வூரில் அவதரித்த திரிகாலமும் உணர்ந்த சிவஞானச் செல் வர் கந்த ஞானியாரவர்கள் பெயராலுட் இவ்வூர் சிந்தாமணிப் பிள்ளையாருக்கு அரிச்சனைகள் செய்வித்து அவருடைய சந்நிதா னத்தில் "ஆறுமுகநாவலரின் திருத்தொண்டு சேவா நிலை யம்"* **"Bureau Propagating Arumuga Navalar's Holy Mission"** *என்னும் நாமத்துடன் ஓர் நிலையம் முதியோர்கள் இளைஞர்கள் அனேகருடைய சமூகத்திற் கீழ்ே கை யொப்ப மிட்டிருப்பவரராற் திரு அருளை முன்னிட்டு இவ்வூரிற் தொடங் கப் பெற்றிருக்கிறது.*

*உடனே "ஆறுமுக நாவலர் ஞாபக சிவஞானபூசை வித்தியாசாலை" என்னும் நாமத்துடன் ஓர் "ஈவுநேர சமய சாத்திர பாடசாலை"* **"Leisure Time Religious School"** *தொடக்கப்பெற்றிருக்கிறது. அன்று தொடக்கம் ஓர் உபாத்தி யாயரை நியமித்துச் சிவநாமங்கள் சொல்லிக்கொடுக்குமாபோற் பாலர்களுக்கும், வளர்ந்தபிள்ளைகளுக்கும் சிவஞான சித்தியார் மூதற் சூத்திரத் திருவிருத்தங்கள் பாடமாக்குவதற்குத் தின மும் சனி, ஞாயிற்றுக்கிழமை களிலும், விடுமுறைநாட்களி லும் காலையிலும் மற்றநாட்களிற் பின்நேரத்திலும் இவ் விரண்டு மணித்தியாலம் சொல்லிக் கொடுத்துப் படிப்பிக்கப் பெற்றுவருகிறது. மாலை நேரத்திலும் இரவிலும் சில கோயில்*

களிலும் சொல்லிக் கொடுக்கப் பெற்றுவருகிறது. நன்றாய்வாசிக்கத்தெரிந்த வளர்ந்த பிள்ளைகள் ஒருவர்மாறி ஒருவர் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தும் உதவிசெய்கிறார்கள். கோயிலுக்குவரும் முதியோர் அவைகளைக் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சில முதியோர் தாங்களும் வாய்திறந்து சொல்லுகிறார்கள். ஒவ்வொருபிள்ளைக்கும் இனமாக இப்புத்தகம் முதற் சூத்திரம் கீழே கையொப்பமிட் டிருப்பவராற் கொடுக்கப் பெற்றிருக்கிறது. குறித்த திரு விருத்தங்களின் ஒவ்வொரு வரியிலும் அதிகப்பற்றாய் ஆறு சொற்களுள. ஒவ்வொருவரியையும் இரண்டாய்ப் பிரித்து ஒவ்வொரு பிரிவையும் நாலுமுறை திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொடுக்கப்பெற்று வருகிறது. ஒவ்வொருநாளும் ஒவ்வொருபக்கத்திலுள்ள ஆறு திரு விருத்தங்கள் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொடுக்கப்பெற்று வருகிறது. இவ்விதம் அதிலுள்ள 70 திரு விருத்தங்களையும் திருப்பித் திருப்பிப் பல முறை சொல்லிக்கொடுத்துவர அவை சீக்கிரம் நன்றாய் மனப்பாட மாக்கப்பெற்றுவிடும். சிறு பிள்ளைகளை விருப்பமாய் வரச் செய்வதற்கு அவர்களுக்குக் கற்கண்டு, சீனிமிட்டாய் சிறு விஸ்கோத்துவகைகள் சிலநாட்களுக் கொருமுறை வேண்டிக் கொடுக்கப்பெற்றுவருகிறது.

வித்தியாபகுதியார் அங்கீகரிக்கும் இடாப்பு திகதிகள், கிழமை நாள்கள் வெட்டி எழுதி அதிற் பிள்ளைகளின் வரவு பதிந்து தினமும் பாவிக்கப்பெற்று வருகிறது.

வித்தியாகர்த்தருக்குத் தெரிவித்து அவராற் பிள்ளைகளுக்குச் சோதனைகள் வைப்பித்துக் குறித்த சாத்திரப் பாட்டுகள் எல்லாம் பாடமாக்கின பிள்ளைகளுக்குச் சித்திப்பத்திரங்களும் (Certificates) உபகாரங்களும் கொடுக்கும்படி விண்ணப்பம் அனுப்பப்பெறும். இவ்விதம் சமய சாத்திரங்கள் படிப்பதாற் பிள்ளைகள் வளர்ந்து வரும்காலத்தில் நாஸ்திகக்கொள்கைகளையும் கொம்மியூனிஸ்ற் கொள்கைகளையும் அனுசரிக்காமலும், கைக்கூலியும் சட்டவிரோதமானவும், சமய விரோதமானவும் கொடியபாவமான சாதனங்களில் ஈடு படாதும் கடவுளுக்குப் பயந்து தங்களுக்குத் தாங்களே காவலாய்ச் சன்மார்க்கவாழ்வு நடத்துவார்கள். குற்றவாளிகள் அரச சட்டப்படி தண்டிக்கப்படும் ஸ்தாபனங்களின் செலவுகள் அரசாங்கத்திற்குமிகமிகக்குறையும், அரசாங்கத்திற்கு அதைநன்றாய் உணர்த்தவேண்டும். ஆகையால் ஒவ்வொரு சமயப்பிள்ளையும் தன்தன் சமயசாத்திரத்தையும், சன்மார்க்க நெறிகளையும் அந்தந்தச் சமய உபாத்தியாயரால் ஒவ்வொருபள்ளிக் கூடத்திலும், மற்றும் சமயசாத்திரபோதனைநிலையங்களிலும் கட்டாயமாய்ப் படிப்பிக்க அரச சட்டம் உண்டாக்கவேணுமென்றும் அவ்விதபடிப்புக்கு அரசாங்கம் பண உதவி செய்யவேணுமென்றும் ஒவ்வொரு சமயப் பெற்றோரும்

ஆங்காங்கு அவ்வச்சமயப் பெற்றோர் சங்கங்கள் ஸ்தாபித்து உதவி பெறும்வரையும் அரசாங்கத்தின் உதவிக்குத் திரும்பத் திரும்ப விண்ணப்பம் செய்யவேண்டும். இந்தியாவிலுள்ள சிவாகமசைவ ஆதீனங்களிடத்தும் உதவிபெறவிண்ணப்பம் அனுப்ப வேண்டும்.

மேலும் "......அ(ஆ)றுதொழிலோர் நூல் மறப்பர் காவலன் காவாவிடில்" என்று திருக்குறளிற் சொன்னபடி அன்னிய அரசாங்கம் இலங்கையிலும் இந்தியாவிலும் முன்னே வந்தமையாலும் அரசாங்க உதவி பெருமையாலும் ஆறு தொழிலாளராகிய அந்தணர்கள் தங்கள் சீவியத்திற்குப் போதிய வருவாயில்லாத அதிகப்பற்றுேர் இலங்கையிற் தற்காலம் நிலைதளம்புகிறார்கள். ஆகையால் அக்குலத்தவர்களுக்குச் சமஸ்கிருதம் படிப்பிக்கவும் மற்றும் தேவையான உதவிகள் அவர்களுக்கு அரசாங்கத்தாரால் செய்விக்கவும் சிவாகம சைவாபிமானிகள் உண்மையான தொண்டு ஆற்ற வேண்டும்—வறுமைப்பிணியின் கொடுமையாற் காற்கொத்தரிசிக்குக் காதவழி போகும் பிராமண குலத்தவர்களை இறந்தவர்களின் வீட்டுக்கிருத்திய நேரங்களிற்தான் அதிகமாய் இலங்கையிற் காணலாம். அந்தணவகுப்பினர் தீய கன்மமுடைய அனேகரிடம் போய் அரிசி முதலியன வேண்டுவதினால் அவர்களுக்குக் கொடுப்பவர்களுடைய கொடிய பாவங்களிற் பங்குபற்றுகிறார்கள். அதனால் அவர்கள் சந்ததி அருளற்று மருளுற்று, அறிவற்றுத் தேய்ந்து மாய்ந்து போகின்றது. அதனாற் சிவாகம சைவசமயத்திற்கு வரவரக் கேடு அதிகம் விளைகின்றது—ஆகையால் இந்நிலையமும் அதற்கும் இயன்ற தொண்டுகள் செய்யும். இலங்கையிலே சனப்பிரதிநிதிகளாகிய பாளிமேந்து அங்கத்தவர்கள் காவலராகிய அரசாங்கத்தின் உதவியைப் பெற்றுக்கொடுக்கவேண்டும்.

சிவாகம சைவாபிமானிகள் தங்கள் தங்கள் ஊர்களிலும் மேற்சொன்ன முறையிற் சிவஞானசித்தியார் படிப்பிக்க ஏற்பாடுகள் செய்து சிவபுண்ணியம் பெறும்படி அவர்களை மிகவும் தாழ்மையாய் வேண்டுகின்றேன். இவ்வியக்கத்திற்கு ஆள் உதவி பெறுவதற்குப் பள்ளிக்கூடங்களிற் படிக்கும் வளர்ந்த பிள்ளைகளின் பஞ்சாயத்தார் குழு ஒவ்வொரு ஊரிலும் வேண்டும்.

தற்காலம் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் போன்றவர்கள் திருஅவதாரம் செய்யும்படியும் அவர் போன்ற தூய தபோதனர்கள் இப்பூவுலகில் அவதரிக்கத் தக்க துணைக்கருவிகளாக அவருடைய பெற்றோரைப் போல் நோக்கமும், தவவாழ்வும் உடையவும், காம ஆசை முதலிய பல சுயபோக ஆசைகளும், தீய வாழ்க்கையும் அற்ற, உள்ளத் துறவுடைய,

தூய, சிவபக்த நிஷ்காமிய இல்வாழ்க்கையாளர்கள் வேண்டுமென்றும், சிவாகமசைவம் தழைத்தோங்க அவர்செய்த சிவபுண்ணியத் தொண்டைத் தொடர்ந்தாற்றுவதற்கு ஓர் சிறந்த "**சிவபக்த சைனியம்**" ஒன்று இப்பூவுலகில் ஸ்தாபிக்கப் பெற வேண்டுமென்றும் அவர் போன்றவர்கள் அச்சைனியத்திற்குச் சீவியகாலப் படைத்தலைவராயிருக்க வேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவனைச் சிவாகம சைவசமயிகள் இனிமேல் என்றும் காலை மாலை பிரார்த்திக்கும்படியும் மிகவும் தாழ்மையாய் அவர்களை வேண்டுகின்றேன். அடியேனும் அப்படியே ஒவ்வொரு நாளும் பிரார்த்திக்கின்றேன். இறைவன் அருளால் இனிமேல் இப்பூவுலகில் ஸ்தாபிக்கப்பெற்று என்றைக்கும் நிலையாய் நடைபெறவிருக்கும் சிவாகம சிவசைனியத்தில், சிவஞானபூசைத் தொண்டு பூமியெங்கும் செய்வதற்கு அடியேனும் அடியேன் போன்ற ஆயிரக்கணக்கான சிவனடியவர்களும் "தரையினிற் கீழைவிட்டுத் தவஞ்செய் சாதியினில்" திருஞானசம்பந்திமூர்த்தி சுவாமிகளின் பெற்றோர் போன்ற நிஷ்காமிய இல்வாழ்க்கை நடத்தும் குடும்பங்களிற் திரும்பத் திரும்ப மனிதப்பிறவியாய்ப் பிறக்கவேண்டுமென்று அடியேன் எப்பொழுதும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். என்போன்ற நோக்கமுடைய மற்றவர்களும் அப்படியே எப்பொழுதும் இறைவனைப் பிரார்த்திக்கும்படி அவர்களை அன்புடன் வேண்டுகின்றேன்.

கூடுமானால் ஒவ்வொரு ஊரிலும் இத்திருத்தொண்டைப் பரிபாலிப்பதற்கு உதவிபுரிய இந்த ஸ்தாபனத்திற் தொடர்பில்லாத வியாபார ஐக்கிய சங்கங்கள் ஆறுமுகநாவலர் பேரிற் சிவாகம சைவசமயிகள் மாத்திரம் பங்காளராய்ச் சேர்ந்து உண்டாக்கி நடத்திச் செலவு போக இலாபத்தை இப் படிப்புத்தொண்டிற்குக் கொடுத்தால் மிகவும் நன்று.

அரசியல் விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கு "**சர்வதேச சங்கம்**" (U. N. O.) ஸ்தாபிக்கப்பெற்று இருப்பது போற் சமயவிஷயங்களைப் பேசுவதற்கு "**அகில தேச சர்வ சமய சங்கம்**" ஒன்று இலங்கையில் அல்லது இந்தியாவில் ஸ்தாபிக்கப்பெறல் வேண்டும்.

யாழ்ப்பாணம் சண்முகநாதன் புத்தகசாலையிலும், கீழே கையொப்பமிட்டவரிடத்தும் இச்சிவஞானசித்தியார் முதற் சூத்திரம் பிரதியொன்று 10 சதவீதம் எவரும் தேவையான பிரதிகள் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

அராலி தெற்கு
வட்டுக்கோட்டை
இலங்கை

**வே. கந்தையா**
சிவாகம சைவசமய இலவசபிரசாரகர்
**1-2-1954**

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்

உ

சிவமயம்

# மிகுந்த ஆவலுடைய ஓர் விண்ணப்பம்

சுயராச்சியம் பெற்ற இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள எல்லாப்பள்ளிக் கூடங்களினதும், கல்லூரிகளினதும் முகாமைக் காரர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், எல்லாச்சமய போதகர்களுக்கும் யான் தாழ்மையாய்ச் செய்யும் விண்ணப்பமாவது:—

உலகிலே மனிதவர்க்கமானது கடவுளை அலட்சியம் செய்து ஓர் தீயசக்திக்கு ஆளாகிக் கொடிய யுத்தங்களாலும் கொடிய பாவச்செயல்களாலும் கெட்டுப்போகின்றது.

ஆகையால் உங்கள் முகாமையிலும், தொடர்பிலும் இருக்கும் பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும் படிக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் அதன் பிறப்புரிமையான சொந்தச் சமய சாத்திரத்தையும் அச்சமயத்தை ஆதாரமாய்க்கொண்ட சன்மார்க்க நெறிகளையும் கட்டாயப் பாடங்களாய் அப்பிள்ளையின் சமயத்தை அனுசரிக்கும் உபாத்தியாயரால் தயவு செய்து படிப்பியுங்கள். அப்படிப் படிப்பிப்பதால் நாஸ்திகக் கொள்கையும் Communism என்று சொல்லப்படும் பொதுவுடைமைக் கொள்கையும், கைக்கூலியும் அதனால் உண்டாகும் நீதியற்ற செயல்களும் சகலவித குற்றங்களும் அதிகமாய் நிகழாதென்று அரசாங்கத்திற்கு எழுதி உணர்த்தி அப்படிப்புக்குப் பிள்ளைகளுக்கு உபகாரம் கொடுத்து அவர்களை ஊக்கப் படுத்துவதற்குப் பண உதவி செய்யும்படி அரசாங்கத்திற்கு எழுதுங்கள். அதுபெறுவரையும் திருப்பித் திருப்பி எழுதுங்கள்.

சமயபாடம் படிக்க வித்தியாசாலைகளிலும், கல்லூரிகளிலும் ஒதுக்கப்பெற்ற நேரத்தில் ஒவ்வொரு நாளும் சைவசமயப் பிள்ளைகள் இச் சிவஞான சித்தியார் பாட்டுக்களைப் பாடமாக்கச்செய்யுங்கள். உபாத்தியாயருக்கு உதவி செய்வதற்கு ஒவ்வொரு வகுப்பிலுள்ள சைவசமயப் பிள்ளைகளுள் ஒவ்வொரு பஞ்சாயத்தார் குழு நியமித்துவிடுங்கள். மற்றும் விபரங்களைப்பற்றி இச் சிறு புத்தகத்தில் யான் தெரிவித்திருப்பதைத் தயவு செய்து வாசித்துப் பார்த்து இம்மேன்மையான தொண்டிற்கு உதவி செய்யுங்கள். உங்கள் அன்பான சிவபுண்ணிய (கடவுள்-புண்ணிய) உதவியைத் தாழ்மையுடன் வேண்டுகின்றேன்.

யாழ்ப்பாணம், சண்முகநாதன் புத்தகசாலையிலும் கீழே கையொப்பமிட்டவரிடத்தும் பிரதி ஒன்று 10 சதமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

வே. கந்தையா
(மலாயாப் பென்சனர்)
1.2-1954

அராலி தெற்கு•
வட்டுக்கோட்டை, இலங்கை,

# ஸ்ரீமத் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை,

## மயிலாப்பூர், அவர்களுடைய சிறப்புரை.

---

வாசித்தேனில்லை வரதன் சிவாகமத்தைப்
பூசித்தேனில்லை யவன் பொன்னடியை—நேசித்தே
ஒப்பனையாள் செழ்வனென ஓதித் துதிக்கிலேன்
எப்படி யானீடேறுவேன்.

சிவபெருமானைப் பரம்பொருளாகக் கொண்டது சைவசமயம். இதன் கொள்கைகளும் அனுட்டிக்கும் முறைகளும் **பரமபதியால் வேதசிவாகமங்கள் மூலம் எமக்கு வெளியிடப்பட்டுள்ளன. வேதசிவாகமங்கள் சிவவாக்கு** என்பது

**"வேதமோடாகமம் மெய்யாமிறைவன் நூல்"** என்னும் திருமந்திரப் பாசுரத்தால் அறியலாம்.

வேதசிவாகமங்கள் தேவபாஷையாகிய சமஸ்கிருதத்தில் உள. இவற்றின் பொருள்களையே தமிழில் உள்ள பன்னிரு திருமுறைகளும், மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கும், திருப்புகழ், தாயுமானவர் பாடல், கந்தப்புராணம் முதலியவை எடுத்துக் கூறும். வேதசிவாகமங்களைப் பிரமாணமாகக் கொண்டே பண்டை நாள் முதல் சைவசமயம் சமயாசாரியர், சந்தானகுரவர், தமிழ் நாட்டுச் சோழ, சேர, பாண்டிய அரசர் முதலிய பெரியோர்களால் பரிபாலிக்கப்பட்டு வந்தது. வேதசிவாகமப் படியே இந்தியாவிலும் இலங்கை முதலிய தேசங்களிலுள்ள கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. அக்கோயில் பூசை முதலியன சைவாகம விதிப்படியே நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ் நாட்டிலுள்ள பெரிய கோயில்களில் வேதபாராயணம், திருமுறைப்பாராயணம், புராணப் பிரசங்கம் முதலியன பெரியோர்களால் நியமிக்கப்பட்டு சைவப்பிரசாரம் நடந்தேறி வந்தது. இப்போது வேதசிவாகமப் படிப்பு குறைந்துவிட்டது. இதை நோக்கியே எமது நாவலர் பெருமான் 80 ஆண்டுகளுக்கு முன்னரே வேதசிவாகம பாடசாலை முக்கியமான இடங்களில் அமைத்து மாணவர்களுக்குச் சமயபோதனை புகட்ட வேண்டுமென்று முயற்சி செய்தார். அவர் எண்ணம் கை கூடு

வதற்கு முன் அவர் சிவபதமடைந்தனர். ஆயினும சிதம்பரத்தி லுள்ள சைவப் பிரகாச வித்தியாசாலையின் சார்பாக இப்போது சைவசித்தாந்தப் புலவர் வகுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது வயதில் முதிர்ந்த வாலிபர்களுக்கே உரியது.

ஐந்தாம் வகுப்பிலுள்ள மாணவர்கள் முதல் எல்லா வகுப் பின் சிறு மாணவர்களுக்கும் சமயக்கல்வி இளமையிலேயே புகட்டவேண்டும் என்று யாழ்ப்பாணம், அராலி தெற்கு வே. கந்தையா என்னும் சிவதொண்டர் "ஆறுமுகநாவலரின் திருத்தொண்டு சேவா நிலையம்" ஒன்று ஸ்தாபித்து அதன் வழியாகச் சிவஞான சித்தியாரின் முதற் சூத்திரத்தை (70 பாக் களை) அச்சிட்டு அதை எல்லா மாணவரும் மனப்பாடம் செய் யும்படி கற்பிக்கவேண்டியது அவசியமென்று விண்ணப்பஞ் செய்துள்ளார். பல துண்டுப் பிரசுரங்களும் வெளிப்படுத்தி யுள்ளார். இத்தொண்டு மிகவும் போற்றத் தக்கதே.

சிவஞானசித்தியார் சகலாகம பண்டிதராகிய அருணந்தி சிவாசாரியரால் இயற்றப்பட்டது. அது எல்லாச் சிவாகமங் களின் சாரமாக நிலவுவது.

> "பாதிவிருத் தத்தாலிப்பார் விருத்தமாக வுண்மை
> சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவ தென்னாளோ".

என்று தாயுமானவரால் போற்றப்பட்ட இச்சைவ நூலைத் தகுந்தவர்களைக் கொண்டு பிறருக்குப் படிப்பிப்பது நலமேயாம்.

சிவஞானசித்தியார் மூலமாகச் சைவசமயப் பிரசாரம் தொடங்கிய ஸ்ரீ வே. கந்தையா அவர்களுக்கு சிவநேயர்கள் உதவிபுரிந்து அவருடைய தொண்டை நிறைவேற்றிப் பரவச் செய்வார்களாக.

"பழைய வைதிக சைவம் பரக்கவே".

> "மறைமுடி விற்பயில் கருத்தும் மன்னிய மெய்ப்பொருள் [விருப்பும்
> கறைமிடற் றோன்திருவடிக்கீழ் மெய்யன்புங் கடுந்துயர் நோய்
> பறையவரு மிம்மூன்றும் பரிந்தியல்பாக் கிடைத்தமனம்
> நிறைவுடையோ ரேவரவர் நீடூழி வாழியவே."

23-3-54. சே. வெ. ஜம்புலிங்கம்.

உ

## கோயமுத்தூர், சேக்கிழார் நிலையம்,
## சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார், B. L.,
## அவர்கள் எழுதிய
## மதிப்புரை.

ஸ்ரீ ஆறுமுகநாவலர் திருத்தொண்டு சேவா நிலையத்தின் பணி மிகச்சிறந்ததும், இக்கால நிலைக்கேற்ற பெரும் பணியுமாகும். திரு. கந்தையா அவர்கள் மேற்கொண்டுள்ள இப்பெரு முயற்சி இறைவ ரருளால் முற்றுப்பெற்று உலகுக்கு நன்மை தந்து நிலவுமாறு இறைவரைப் பிரார்த்திக்கின்றேன். இதற்காக அவர்கள் வகுத்துள்ள முறைகள் எளிதாய் யாவரும் கையாளத் தகுந்தன. அப்படிக் கையாண்டு சிவம் பெருகச் செய்யும் மாசனங்களைச் சைவவுலகம் பெறுவதாக. சிவாகம சைவசித்தாந்த சாத்திரப் படிப்பு ஒவ்வோர் சைவக் குழந்தைக்கும் இன்றியமையாதது.

கல்வியதிகாரிகள் இதற்கு உரிய இடந்தந்து ஊக்கம் அளிப்பார்களாயின் உலகம் திருந்தி நல்வழிப்படும் என்பதிற் கையமேயில்லை.

சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார், B.L.
27-3-54.

---

## நன்றியுரை.

இச்சிவஞான பூசைப் போதன பிரசுரத்திற்குச் (1) சிறப்புரை (2) மதிப்புரை எழுதி உதவிய சிவபுண்ணியர்கள் இருவருக்கும் ஏனைய உதவிகள் செய்த மற்றவர்களுக்கும் அடியேனுடைய மனமுவந்த நன்றியை அன்புடன் சமர்ப்பிக்கின்றேன்

31-3-54. வே. கந்தையா.

---

## இப்புத்தகம் கிடைக்கும் இடம்.

ஸ்ரீ சண்முகநாதன் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

வே. கந்தையா,
ஆறுமுகநாவலரின் திருத்தொண்டு சேவா நிலையம்,
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை,
இலங்கை.

**பிரதி ஒன்றின் விலை சதம் 10. முத்திரைச் செலவு வேறு.**